# SOCIAL ORGANIZATIONS NETWORKING FOR DEVELOPMENT (SOND)

# Annual report -2021

**Vision**

**Creating a better society**

**Mission**

**Supporting and Organizing different people organizations and group to strengthen the civil society and people to make them to function as a model to follow in order to create a better society**

# வருடாந்த அறிக்கை

# 2021

# அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு

# (SOND)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனம் கடந்த 23 வருடங்களாக செயற்பட்டு வருகின்றது. எமது நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பின்வரும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## 1) திட்டங்களின் விபரங்கள்

1. மாற்றத்திற்கான பாதை செயற்திட்டம் (PATH to Change project)
2. தனிக்குடும்ப தலைமைகளின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தலும் நல்வாழ்வும் தொடர்பான செயற்திட்டம் (FHH project)
3. முரண்பாடு நிலைமாற்றத்திற்கான பன்மைத்துவ செயற்திட்டம் (PACT project)
4. சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயற்திட்டம் (SCORE project)

## 2) ஏனைய செயற்பாடுகளின் விபரங்கள்

1. தகவல் வளநிலையம் (Information Centre)
2. விசேட செயற்பாடுகள் (Special Activities)
    1) சிறுதொழில் முயற்சிகள்
    2) விழிப்புணர்வு செயற்பாடுகள்
    3) கருத்தரங்குகளின் விபரங்கள்
    4) முக்கிய கலந்துரையாடல்களின் விபரங்கள்
    5) உதவித் திட்டங்களின் விபரங்கள்
    6) பயிற்சியாளர்களையும் தொண்டர்களையும் பயிற்றுவித்தல்
    7) தொழில் பாலமாக செயற்படல்

## 3) புகைப்படங்கள் சில

## யாழ் மாவட்டத்தின் திட்டங்களின் விபரங்கள்

### மாற்றத்திற்கான பாதை செயற்திட்டம் (PATH to Change project)

யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் மாற்றத்திற்கான பாதை செயற்திட்டம் எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 44 பாடசாலைகளிலும் 30 சிறுவர் கழகங்களிலும் 20 சிறுவர் இல்லங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

- ❖ யாழ்ப்பாணத்தில் 5 வலயமட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றன.
- ❖ ஆசிரியர்களுக்கான 15 திறன் விருத்தி பயிற்சிகள் வெவ்வேறு தலைப்புகளாக Zoom ஊடாக நடைபெற்றன.

- ❖ மாற்றத்திற்கான பாதை திட்டத்தின் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான 2 கூட்டங்கள் Zoom இனூடாக நடைபெற்றன.

- ❖ மீள் நினைவுபடுத்தல் செயலமர்வுகள் வலயமட்டங்களாக 3 செயலமர்வு யாழ்ப்பாணத்திலும் 1 செயலமர்வு கிளிநொச்சியிலும் உள்ளடங்கலாக 4 Refresher Training நடைபெற்றுள்ளன.

- ❖ 1 பகுதியினருக்கான 2 நாள் கொண்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிநெறி நடைபெற்றுள்ளன.

- ❖ வடமகாணத்தின் மாற்றத்திற்கான பாதை திட்டத்தின் நிரந்தர வளவாளர்கள் தெரிவு செய்யப்பட்டு 11 zoom trainings உடன் 2 நாள் கொண்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிநெறியும் நடைபெற்றுள்ளன.

- ❖ ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வுகள் 11 நடைபெற்றுள்ளது. இதில் zoom இனூடாக 7 செயலமர்வுகளும் 4 நேரடியான செயலமர்வுகளும் நடைபெற்றுள்ளன.

- ❖ பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வுகள் 2 நடைபெற்றுள்ளன.

- ❖ கிளிநொச்சி அபிவிருத்தி உத்யோகத்தர்களுக்கான மாற்றத்திற்கான பாதை திட்ட பயிற்சி வழங்கப்பட்டது.

- ❖ இந்த பயிற்சியை முடித்துக்கொண்ட ஆசிரியர்களும் தன்னார்வலர்களும் பாடசாலைகளிலும் சிறுவர் இல்லங்களிலும் சிறுவர் கழகங்களிலும் மாணவர்களுக்கான பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.

- ❖ அதிபர்களுக்கான கூட்டங்கள் 2 zoom இனூடாக நடைபெற்றுள்ளன.

- ❖ அச்சுவேலி சீர்திருத்தப்பள்ளி சிறுவர்களுக்கான 7 பயிற்சிகள் நடைபெற்றுள்ளன.

## தனிக்குடும்ப தலைமைகளின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தலும் நல்வாழ்வும் தொடர்பான செயற்திட்டம் (FHH project)

IOM நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் தனிக்குடும்ப தலைமைகளின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தலும் நல்வாழ்வும் தொடர்பான செயற்திட்டம் எமது நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்

- ❖ இளையோருக்கான Zoom செயலியூடான 7 பயிற்சிகள் நடைபெற்றன. இப்பயிற்சி நெறிகள் வாழ்வைத்திட்டமிடல், சமூகத் தலைவர்களாவது எப்படி, தொழில் வழிகாட்டல், சமூக வலைத்தளப் பாவனைகள், சமாதான வாழ்வைக் கட்டியெழுப்புவது எப்படி, இணையத் தளத்தின் வினைத்திறனான பயன்பாடு ஆகிய தலைப்புக்களில் நடைபெற்றன.

- ❖ இளையோருக்கான தொழில் வழிகாட்டல்ப் பயிற்சிகள் 8 நாட்கள் நடைபெற்றன.

- ❖ பெண் தலைமைத்துவக் குடும்ப பெண்களுக்கான பயிற்சிகள் 6 நாட்கள் நடைபெற்றன.

- பெண்தலைமைத்துவக் குடும்பப் பெண்களுக்கான இலவச அரச சேவைகள் தொடர்பான பயிற்சிகளாக சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூர்த்தி உத்தியோகத்தர், கிராம சேவகர் உத்தியோகத்தரின் தலைமை அதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

- பெண்தலைமைத்துவக் குடும்பப் பெண்களுக்கான RDB மற்றும் மக்கள் வங்கியின் சேவைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

❖ பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தேவைகளை உரிய உத்தியோகத்தர்களுடன் இணைக்கும் வகையிலான Mobile clinic நடைபெற்றது. இதில் 40 பயனாளிகள் பங்குபற்றியிருந்தனர். இதன் மூலம் அவர்களின் தேவைகள் தொடர்பான கோரிக்கைகள் உரிய அதிகாரிகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ சமாதான சகவாழ்வைக் கட்டியெழுப்புதல் எனும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்வேறு கலை கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ்மாவட்ட சர்வமத சமாதான சபை உறுப்பினர்களும் இளையோர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டனர்.

## முரண்பாடு நிலைமாற்றத்திற்கான பன்மைத்துவ செயற்திட்டம் (PACT project)

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் முரண்பாட்டின் நிலைமாற்றத்திற்கான பன்மைத்துவ செயற்திட்டம் எமது நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தில் இவ்வருடமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

❖ யாழ் மாவட்ட சர்வமத சமாதான குழுக்களுடனான மாதாந்த கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

❖ யாழ் மாவட்ட சர்வமத சமாதான குழுக்களுக்கான பன்மைத்துவ சமுதாயத்தையும் சுதந்திரத்தையும் கட்டியெழுப்புதல் மற்றும் சிறுவர், பெண்கள் உரிமையும் வீட்டு வன்முறையும் எனும் பயிற்சிநெறிகளும் நடைபெற்றுள்ளன.

❖ சர்வமத சமாதான குழுவொன்று தென் இலங்கையிலுருந்து வடக்கிற்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்தபோது அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

❖ கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட 120 வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

❖ வறிய குடும்பங்களைச் சேர்ந்த 80 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

❖ இத்திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்துவதற்காக தேசிய சமாதானப்பேரவையினால் நிறுவனத்தின் திறன் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

## அம்பாறை மாவட்டத்தின் திட்டங்களின் விபரங்கள்

### சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயற்திட்டம் (SCORE project)

தேசிய சமாதானப் பேரவையின் நிதி அனுசரணையுடன் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயற்திட்டம் (SCORE) அம்பாறை மாவட்டத்தில் எமது நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

- “ஒவ்வொரு நாளைய ஜனநாயகத்தின் ஊடாக வலுவான சமூகம்“ என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

- சமாதான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மாதாந்தம் நடைபெற்று வருகின்றது.

## ஏனைய செயற்பாடுகளின் விபரங்கள்

### தகவல் வளநிலையம் (Information Centre)

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவையானது யாழ் மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் வழங்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், எமது பணியாளர்கள் ஆகியோர் எமது நூலகத்தில் நூல்களை பெற்று வாசிப்பதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

### விசேட செயற்பாடுகள் (Special Activities)

**சிறுதொழில் முயற்சிகள்**

எமது நிறுவனமானது பெண்களுக்கான தொழில்வாய்ப்பை வழங்கும் நோக்குடனும் உள் நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடனும் யாழ்சக்தி கம்பனியை நடாத்தி வருகின்றது. இதன் முக்கிய உற்பத்தி பொருளாக தட்டை வடை உற்பத்தி செய்யப்படுகின்றது. இக்கம்பனியானது நீர்வேலிப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கம்பனியின் மூலமாக 10 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கம்பனியானது இலாபகரமாக செயற்பட்டு வருகின்றது.

**விழிப்புணர்வு செயற்பாடுகள்**

1. கோவிட் 19 பரவல் காலப்பகுதியில் மக்கள் தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனும் நோக்கில் அவர்களுக்கான விழிப்புணர்வு செய்திகள் பல்வேறு பிரதேசங்களிலும் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்பப்பட்டன. இவ்விழிப்புணர்வு செயற்பாடு யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, உடுவில், காரைநகர், ஊர்காவற்துறை ஆகிய பிரதேச செயலகர் பிரிவுகளில் நடைபெற்றது. இவ்விழிப்புணர்வு செயற்பாட்டின் மூலம் 27152 குடும்பங்களுக்கும் அத்துடன் 32644 தனிநபர்களுக்கும் கோவிட் 19 தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. Mestrual Hyginene Management Day ஐ முன்னிட்டு May 28ம் திகதி Dr.சி.திருமகள் அவர்களினால் Life Skills on Mestrual Hygiene and Health for girls எனும் தலைப்பில்

செயலமர்வு ஒன்று எமது நிறுவனத்தால் Zoom செயலி மூலம் ஒழுங்குசெய்யப்பட்டது.. இதில் 60 பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டு இருந்தனர்.

**கருத்தரங்குகளின் விபரங்கள்**

எமது நிறுவனத்தினால் ''அறிவூட்டுவோம்'' எனும் நிகழ்ச்சியினூடாக பல்வேறு திணைக்களகங்களின் சேவைகளை சமூகத்திற்கு எடுத்துச்சொல்லும் வகையில் அவர்களால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பான கருத்தரங்குகள் Zoom செயலி ஊடாக நடைபெற்றன. நடைபெற்ற திணைக்களங்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு

1. மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் சேவைகள்
2. நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் சேவைகள்.
3. உளவளத்துணை திணைக்களத்தின் சேவைகள்
4. கைத்தொழில் திணைக்களத்தின் சேவைகள்
5. பெண்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் சேவைகள்
6. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சேவைகள்
7. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் சேவைகள்
8. சமூக சேவைகள் திணைக்களத்தின் சேவைகள்
9. சமுர்த்தி செயற்திட்ட பயன்பாடு
10. சிறுவர் உரிமைகளும் மேம்பாடும்

**முக்கிய கலந்துரையாடல்களின் விபரங்கள்**

1. யாழ் மாவட்ட செயலகத்தில் சிறுவர்கள், பெண்கள் மேம்பாடு தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் நிறுவனம் சார்பில் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலந்துகொண்டார்.
2. கோவிட்-19 தொற்றின் பின்னர் புலம்பெயர் தொழிலாளர்களின் நிலை பற்றிய ஆய்வு நிகழ்வு கொழும்பில் நடைபெற்றபோது நிறைவேற்றுப் பணிப்பாளரும் பயிற்சியாளர்களும் நிறுவனம் சார்பில் கலந்துகொண்டனர்.
3. பாரிய உட்கட்டமைப்பு செயற்திட்டங்களை செயற்படுத்துவதை கண்காணித்து இவை பொருளாதார ரீதியாக நீடித்து நிலைத்திருக்கும் தன்மை கொண்டதா? இதன்மூலம் சமூகத்திற்கு போதுமான பயன்கள் கிடைகிறதா? இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகையில் சூழலில் எதாவது மாற்றங்கள் பாதகமாக ஏற்படுகின்றதா? இவை சமூகத்தின் இடம்பெயர்வுக்கு வழிவகுக்கிறதா? அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறதா? சுற்றாடல் பாதிக்கப்படுகிறதா? போன்றவற்றை கண்காணித்து இவற்றை அமுல் செய்கின்ற திணைக்களங்கள்,அமைச்சுகளுக்கு அறிவிப்பது என்றவாறு இலங்கை பூராகவும் இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு CENTER FOR INTERNATIONAL PRIVATE ENTERPRIS நிறுவனத்தால் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இம்முயற்சியில் 5 பங்காளி நிறுவனங்கள் தெரிவு செய்து அவர்களுக்கு சிறு நிதி உதவியளித்து இவற்றை செயற்படுத்துவது சம்மந்தமான கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலந்து கொண்டார்.
4. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்களை கையாளுதல் தொடர்பான கலந்துரையாடலொன்று எமது நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் நிறைவேற்று பணிப்பாளர் உட்பட உயர் அதிகாரிகள் 12 பேர் கலந்து கொண்டனர்.
5. தேசிய சமாதான பேரவையால் ஒழுங்குபடுத்தப்பட்ட Training of Master Trainers on Prevention of hate speech யாழ் மாவட்டத்தை பிரதிநிதிதுவப்படுத்தி எமது நிறுவன பணியாளர்கள் 3 பேர் கலந்து கொண்டனர்.

6. பன்மைத்துவ சமுதாயத்தில் தோன்றும் முரண்பாடுகளை சீர்செய்து சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூக அமைப்புக்களின் பங்களிப்பு தொடர்பான கருத்தரங்கில் 4 வளவாளர்கள் கலந்துகொண்டனர். இதில் எமது நிறைவேற்றுப்பணிப்பாளரும் ஒரு வளவாளராகக் கலந்துகொண்டார்.
7. யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் தலைமை அதிகாரி திருமதி மிராண்டா அவர்களும் கிளிநொச்சி அலுவலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி சர்மிலி அவர்களும் மாற்றத்திற்கான பாதை செயற்திட்ட முன்னேற்ற நடவடிக்கைகளை பார்வையிட்டு கலந்துரையாடுவதற்காக எமது நிறுவனத்திற்கு வருகை தந்திருந்தனர். அத்துடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் செயற்படுத்தப்படும் இத்திட்டம் தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர்.
8. புரவி (Burevi) சூறாவளி மன்னார் மாவட்டத்தில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பான அறிக்கை எமது நிறுவனத்தால் UNICEF நிறுவன அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டு மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் எமது நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அவர்களால் கையளிக்கப்பட்டது.

**உதவித் திட்டங்களின் விபரங்கள்**

1. கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட 70 வறிய குடும்பங்களுக்கான உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. இவ் உலருணவுப்பொதிகள் அரியாலை பூம்புகார், ராஜஸ்தானி, கோப்பாய் மத்தி, துர்க்காபுரம் தெல்லிப்பளை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டன.
2. 50 வறிய குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. யா/கதீஜா பெண்கள் கல்லூரி. யா/ஒஸ்மானியா கல்லூரி, யா/நாவற்குழி மகா வித்தியாலயம், யா/அத்தியார் இந்துக்கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், யா/சிறி பாரதி வித்தியாலயம், யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், யா/நடேஸ்வராக் கல்லூரி, யா/மகாஜனாக் கல்லூரி, யா/அருணோதயாக் கல்லூரி, யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, யா/இராமநாதன் கல்லூரி, சென் யோசப் வித்தியாலயம், சென்.அன்ரனீஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
3. கோவிட்-19 பரவலில் இருந்து பாதுகாப்பாக செயற்பட வேண்டும் எனும் நோக்குடன் அரச அதிகாரிகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் யாழ் மாவட்ட சர்வமத சமாதான சபை உறுப்பினர்களுக்கும் முகக்கவசங்கள் வழங்கப்பட்டன. இம்முகக்கவசங்கள் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்கு 1600, யா/ஒஸ்மானியா கல்லூரியிற்கு 700, யா/நாவற்குழி மகா வித்தியாலயதிற்கு 700 உம் வழங்கப்பட்டன.
4. கைதடி முதியோர் இல்லத்தில் வாழுகின்ற முதியோர்களுக்கு Surgical gloves, Pampers ஆகியன வழங்கப்பட்டன.
5. வட மாகாண பிராந்திய சுகாதார பணிமனைக்கு 150 PPE kits, 6 Sink, 6 Sprayer ஆகியன வழங்கப்பட்டன.
6. கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட 50 வறிய குடும்பங்களுக்கான உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. இவ் உலருணவுப்பொதிகள் நாவற்குழி மற்றும் நாவாந்துறை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டன.
7. 30 வறிய குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. யா/கதீஜா பெண்கள் கல்லூரி. யா/ஒஸ்மானியா கல்லூரி, யா/நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

## பயிற்சியாளர்களையும் தொண்டர்களையும் பயிற்றுவித்தல்

### 1. பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல்

International Youth Alliance for Peace (IYAP) நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற SYA SCORE திட்டத்தின் பயிற்சியாளர்களில் ச.லவதாரணி, க.யதுசன், அ.வியாசன் ஆகிய மூவரும் 4 மாதங்கள் பயிற்சி பெறுவதற்காக எமது நிறுவனத்தில் பயிற்சியாளர்களாக இணைந்துள்ளனர்.

அதன் அடிப்படையில் கல்வி கற்ற இளைஞர்களின் எதிர்கால வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்தும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அதன் அனுபவங்களையும் வேலை தொடர்பான விடயங்களையும் கற்றுக்கொள்வதோடு திறன்களை வளர்த்துகொள்ளலும் வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதுமே இதன் பிரதான நோக்கமாகும்.

இதனூடாக எதிர்காலத்தில் சமூகத்தின் தேவையை அறிந்து அதற்கேற்ற வகையில் பணியாற்றுவதற்கும் NGO களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் பல்வேறுபட்ட திறன்களையும் ஆற்றல்களையும் பயிற்சியாளர்களிடையே வளர்த்துக்கொள்ள இப் பயிற்சிநெறியை வழங்கி வருகின்றோம்.

### 2. தொண்டர்களை பயிற்றுவித்தல்

எமது நிறுவனத்தில் தொழில் தொடர்பான விடயங்களைக் கற்றக்கொள்வதற்கும் அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கும் பல்வேறு தொண்டர்கள் இணைந்துகொள்வது வழக்கமாக உள்ளது.

இதன் மூலம் அவர்கள் தொழில் தொடர்பான விடயங்களையும் அனுபவங்களையும் கற்றுக் கொள்வதுடன் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

இவ்வாறு தொண்டர்களாக எமது நிறுவனத்தில் இணைந்து கொள்பவர்கள் தமது திறன்களை வளர்த்துக்கொண்டு ஒரு நிறுவனத்தில் பணியாற்ற தகுதியுடையவர்களாக உருவாகும் போது எமது நிறுவனத்தில் தொழில் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் தொழிலைப் பெற்றுக்கொள்வார்கள். எமது நிறுவனத்தில் வாய்ப்புக்கள் இல்லாத போது எமது நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற சான்றிதழைக் கொண்டு வேறு நிறுவனங்களில் தொழில் பெற்று வருகின்றனர்.

### தொழில் பாலமாக செயற்படல்

தொழில் பாலமாக செயற்படும் திட்டமொன்றை இவ்வருடம் நாம் செயற்படுத்தியுள்ளோம். அதாவது தொழில் பாலம் எனும் போது தொழில் வாய்ப்பினைத் தேடுவோரையும் தொழிலாளர்களைத் தேடுவோரையும் இணைக்கின்ற திட்டமாகும்.

இத்திட்டம் தொடர்பான விளம்பரப் பதாகை ஒன்றை எமது அலுவலகத்தில் காட்சிப்படுத்தியுள்ளோம். இவ்விளம்பரத்தைப் பார்ப்பவர்களில் வேலை தேடுவோரும் தம்மை எம்மிடம் பதிவு செய்வார்கள். வேலையாட்களை தேடுவோரும் தம்மை எம்மிடம் பதிவு செய்வார்கள். பொருத்தமானவர்கள் வருகின்ற போது தொழில் தேடுவோரையும் தொழில் வழங்குனரையும் இணைக்கின்ற செயற்பாட்டை இலவசமாகச் செய்து வருகின்றோம்.

# புகைப்படங்கள் சில







Implemented by:


Secondary School Students
Implemented by
National Peace Council of Sri Lanka




பிரதேச செயலகம்
வலிகாமம் வடக்கு







தொடர்புகள்:

ச.செந்துராசா
நிறைவேற்றுப் பணிப்பாளர்
**SOND**
61, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
**E mail: senthu@eureka.lk**
**www.sond.lk**